வலயக் கல்வி அலுவலகம், சம்மாந்துறை
விஷேட விடுமுறை செயற்றிட்டம்
தரம் : 11 பாடம் : விவசாயமும உணவுத் தொழிநுட்பவியலும
தொகுப்பு : P. இஸ்மாயில் ISA (Agriculture)
வீட்டிலிருந்து கற்போம் செயற்றிட்டம்

பகுதி - II
முதலாம் வினா – விடைத் தொகுப்பு
2007 - 2018

www.lkedu.lk

டிசம்பர் - 2018 (பகுதி – 2)

01) நச்சுதன்மையற்ற சமநிலையான ஓர் உணவுவேளையைப் பெற்றுக்கொள்வதற்கு தமது வீட்டுத்தோட்டதில் வெவ்வேறு உணவுப் பயிர்களைப் பயிர் செய்வது முக்கியமானதாகும்

1. வீட்டுதோட்டமொன்றில் பயிர்களை தாபிப்பதற்கு

(a) நாற்று மேடையிலிருந்து நாற்றுக்கள் பெறப்பட்டு நடப்படும் **இரண்டு**மரக்கறி பயிர்களை குறிப்பிடுக

- மிளகாய் தக்காளி கத்தரி லீக்ஸ் கோவா
- சலாது பூக்கோவா நோக்கோல் பீற்றூட்

(b) வயலில் நேரடியாக விதை மூலம் நடவுசெய்யும் **இரண்டு** மரக்கறி பயிர்களை குறிப்பிடுக

- வெண்டி பாகல் புடோல் பீர்க்கு பூசணி
- கரட் நீற்றுப்பூசணி கெக்கரி பிப்பிஞ்ஞா தும்பங்காய்
- போஞ்சி பயற்றை சிறகவரை அவரை முள்ளங்கி
- சுரைக்காய்(நாடை)

2. ஒரு வீட்டுத்தோட்டத்தில் வளர்ப்பதற்கு பொருத்தமான
   (a) குடும்பம் பொயேசியவிலடங்கும் **இரண்டு** பயயிர்களை குறிப்பிடுக
   - சோளம் இறுங்கு குரக்கன்

   (b) பபெசியே குடும்பத்தைச் சார்ந்த **இரண்டு** மரக்கறிப் பயிர்களைக் குறிப்பிடுக
   - பயற்றை போஞ்சி சிறகவரை அவரை

3. துணை நிலப்பண்படுத்தலில் நடைமுறைப்படுத்தப்படும் **இரண்டு** செயற்பாடுகளை எழுதுக
   - மண்கட்டிகளை உடைத்தல் மண்ணை மட்டப்படுத்தல்
   - கற்கள்,முட்களை அகற்றுதல் பாத்தி அமைத்தல்

4. இலங்கையில் அதிகளவில் பயிரிடப்படும் வருடத்தின் எக்காலத்திலும் அறுவடை தரக்கூடிய **இரண்டு** பழப்பயிர்களைக் குறிப்பிடுக
   - பப்பாசி அன்னாசி வாழை கொய்யா

5. பயிர்ச்செய்கையில் செய்யப்படும் **இரண்டு** இடைப் பண்படுத்தல் செயல்முறைகளை எழுதுக
   - களைகளைக் கட்டுப்படுத்துதல்
   - நாற்றைச் சூழ உள்ள மண்ணை இளக்குதல்
   - மண்ணுடன் பசளையை கலந்து விடல்
   - நாற்றின் வேர்களுக்கு மண்ணை அணைத்தல்
   - வாய்க்காலில் உள்ள மண்ணை அகற்றுதல்

6. (a) முட்கம்பி வேலியில் படரவிடுவதற்கான **இரண்டு** கொடிப்பயிர்களை குறிப்பிடுக
   - கோடித்தோடை பாகல் பீர்க்கு சுரைக்காய்
   - நீற்றுப்பூசணி புடோல் சிறகவரை கொடியாலங்காய்
   - தும்பங்காய் கெக்கரி பிப்பிஞ்ஞா பயற்றை
   - போஞ்சி

   (b)வீட்டுத் தோட்டத்தில் நீர் வழிந்தோட முடியாத தேங்கி நிற்கும் இடத்தில் வளர்க்கக் கூடிய பொருத்தமான இலை மரக்கறிப்பயிர்களை பரிந்துரைக்க
   - கங்குன் நீர்முள்ளி வல்லாரை பொண்ணாங்காணி

7. வீட்டுத்தோட்டத்தில் பூச்சிப் பீடைகளை கட்டுபடுத்துவதன் பொருட்டு வளர்ப்பதற்கு பொருத்தமான பூச்சிகளை எதிர்க்கும் தாவரங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக
   - செவ்வந்தி சூரியகாந்தி ஆடாதோடை(பாவட்டை)
   - கற்பூரவள்ளி வேம்பு

www.kedu.lk

8. கத்தரிப் பயிரில் அதனது சில இலைகள் சேதமேற்பட்டு நரம்புகளுக்கிடைப்பட்ட பகுதிகள் அரிக்கப்பட்டு அப்பகுதிகள் வலைப் பின்னல் போல் காணப்பட்டது

(a) மேற்படி சேதத்தை ஏற்படுத்தகூடிய பீடையினைப் பெயரிடுக

- எபிலக்னா வண்டு

(b) அப்பீடையின் வாழ்க்கை வட்டத்தின் எந்தப் பருவம் மேற்படி சேதத்தை ஏற்படுத்தம்

- குடம்பிப் பருவம், நிறைவுடலிப் பருவம்

9. மண்ணின் நீர்வடிதலை அதிகரிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய **இரண்டு** வடிகால் கோலங்களைக் குறிப்பிடுக

- சமாந்தர முறை/கிரிட்டு அயன் முறை
- ஹெரிங்கின் மீன் முள்ளு முறை

10. மண்ணின் PH இனைத் தீர்மானிக்கும் **இரண்டு** முறைகளைத் தருக

- PH தாள் மூலம் ,PH மானி மூலம்

www.lkedu.lk

டிசம்பர் - 2017 (பகுதி – 2)

01. தற்போது இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் 'தேசிய உணவு வேலைத்திட்டம்' எனும் நிகழ்ச்சிதிட்டத்திற்கு அமைவாக பாடசாலையொன்றில் உணவுப் பயிர்ச்செய்கை செய்கை பண்ணுவதற்கும் பாடசாலை வளவில் நாட்டுதல் மற்றும் அயற் சமூகத்தவருக்கு நடுகைப் பொருள்களை விற்பனை செய்தல் ஆகிய நோக்கங்களுக்கென நாற்றுமேடையமைத்து நாற்றுக்களை பெறுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலை வளவில் மரக்கறிப் பயிர்ச்செய்கையையும் ஆரம்பிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது

1. மரக்கறிப் பயிர்களுக்கு மேலதிகமாக பாடசாலை வளவில் செய்கை பண்ணக்கூடிய வேறு உணவுப் பயிர் தொகுதிகள் **நான்கைக்** குறிப்பிடுக
   - தானியப் பயிர்கள்
   - கிழங்குப் பயிர்கள்
   - பழப்பயிர்கள்
   - பருப்பு வகைப் பயிர்கள் / அவரை இனப் பயிர்கள்
   - சுவைசரக்குப் பயிர்கள்
   - இலைமரக்கறிப் பயிர்கள்
   - எண்ணெய் பயிர்கள்

2. நாற்றுமேடை அமைக்கும்போது பொருத்தமான இடத்தை தெரிவுசெய்யும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக
   - போதியளவு சூரியஒளி கிடைத்தல்
   - நீர்வசதி கொண்ட இடமாக இருத்தல்
   - அடிக்கடி பார்வையிடக்கூடிய இடமாக இருத்தல்
   - சிறந்த நீர்வடிப்பை கொண்டிருத்தல்
   - இருவாட்டி மண்ணைக் கொண்டிருத்தல் / வளமான மண்
   - அதிக காற்று வீசாத இடமாக இருத்தல்
   - நோயுற்ற பயிர்கள் செய்கை பண்ணப்படாத இடமாக இருத்தல்
   - அண்மையில் அதே குடும்பத்தைச் சேர்ந்த பயிர்கள் நடப்பட்டிருக்காமை
   - பாதுகாப்பான இடமாக இருத்தல்
   - போக்குவரத்து வசதி உள்ள இடமாக இருத்தல்
   - சுமதரையாக இருத்தல் வேண்டும்

3. வேர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வயலில் வயலில் நாட்டுவதற்கு ஏற்றவாறு நாற்றுக்களை பெறுவதற்குத் தயாரிக்கத்தக்க நாற்றுமேடை வகைகள் **இரண்டைப்** பெயரிடுக
   - நெரிடோக்கோ / துண்ட நாற்றுமேடை
   - சாடி நாற்றுமேடை (பொலித்தீன் உறை, வாழைமடல், யோக்கட் கிண்ணம்)
   - தட்டுநாற்று மேடை
   - ஸ்பொன்ஞ் நாற்றுமேடை

4. நாற்றழுகல் நோயிலிருந்து நாற்றுக்களைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் **இரண்டு** எழுதுக
   - நோயற்ற வித்துக்களை நாற்றுதல்
   - சீரான நீர்வடிப்பு காணப்படல்
   - பங்கசுவிற்கான பரிகரிப்பு செய்யப்பட்ட வித்துக்களை நடுதல்
   - நன்கு சூரியஒளி படத்தக்க இடத்தில் நாற்றுமேடை அமைத்தல்
   - நாற்றுமேடை மண்ணை தொற்றுநீக்கல்

www.kalvi.lk

- நாற்றுக்களுக்கு இடையிலான இடைவெளி அதிகமாக உள்ளவாறு நாற்றுமேடை அமைத்தல்
- கருக்கிய உமி இடுதல்
- மழையிலிருந்து நாற்றுமேடைக்கு பாதுகாத்தல் / பொலித்தீன் இடுதல்
- நாற்றுக்களை ஐதாக்கல்
- நிழலை அகற்றுதல்
- கட்டுபாட்டுடன் நீர் பாய்ச்சுதல்

5. மாணவரொருவர் பயிர்ச்செய்கை மேற்கொள்ளவுள்ள நிலத்திலிருந்து ஒரு பிடி மண்ணை எடுத்து ஈரப்படுத்தி உருண்டையாக்கி அதனை இரண்டு உள்ளங்கைகளுக்கும் இடையில் வைத்து உருளையாக்க முயற்சித்தபோது அது உடைந்தது. இந்த மண்ணின் இழையமைப்பு வகை யாது?
   - மணல் இருவாட்டி / கரடுமுரடான இழையமைப்பு கொண்ட மண்
   - மணலின் சார்பளவு கூடிய மண்

6. பயிர்ச்செய்கை மேற்கொள்ப்பட்டுள்ள மண்ணின் ஈரலிப்பைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகள் **இரண்டைக்** குறிப்பிடுக
   - மண்ணுக்கு மூடுபடையிடல்
   - மண்ணுக்கு சேதனப் பசளை இடல்
   - களைகளை அகற்றுதல்
   - பயிர்ச்செய்கையிலுள்ள தேவையற்ற களைகளை அகற்றுதல்
   - மூடுபயிர்ச் செய்கை

7. பாடசாலை வளவில் நிலக்கீழ்த் தண்டுகளைக் கொண்ட களைகளாவன கோரை, ஆனையறுகு ஆகியன அதிகளவு வளர்ந்திருந்தன இந்தக் களைகளை வெற்றிகரமாக கட்டுபடுத்த உகந்த இரசாயனம் அல்லாத முறைகள் **இரண்டு** தருக
   - ஆழமாக மண்ணை உழுதல்
   - மண்ணுக்கு மூடுபடையிடல் / பத்திரக் கலவையிடுதல்
   - மூடுபயிர்களாக வற்றாளையை நாட்டுதல்
   - மண்ணை ஆழமாக உழுவி நிலக்கீழ் பாகங்களை அகற்றுதல்
   - கையால் பிடுங்குதல்

8. பாடசாலை வளவில் சேரும் சேதனக் கழிவுகளைப் பயன்மிக்க விதத்தில் பயன்படுத்தக்கூடிய விதங்கள் **இரண்டை** எழுதுக
   - கூட்டெரு தயாரிப்பதற்கு பயன்படுத்தல்
   - தாவரங்களுக்கு அண்மையில் மூடுபடையாக இட பயன்படல்
   - உயிர்வாயு தயாரிப்பதற்கு பயன்படுத்தல்

9. இந்தப் பாடசாலைத் தோட்டத்தை ஒன்றிணைந்த பண்ணையாக மாற்றியமைப்பதெனில் இதில் சேர்க்கப்பட வெண்டிய புதிய கூறுகள் **இரண்டைக்** குறிப்பிடுக
   - நன்னீர் மீன்வளர்ப்புத் தடாகம்
   - கோழிவளர்ப்பு அலகு
   - தாரா வளர்ப்பு அலகு
   - மாடு வளர்ப்பு அலகு
   - உயிர் வாயு அலகு
   - பன்றி வளர்ப்பு அலகு
   - விலங்கு வளர்ப்பு அலகு

www.ikeou.lk

10. மாணவர் வீட்டுவளவில் திறந்தவெளி முறையில் சிறுமுயற்சியாகக் கோழிகளை வளர்ப்பதனால் கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டு** தருக
    - முட்டைகளை விற்பனை செய்வதன் மூலம் வருமானம் கிடைத்தல்
    - புரத உணவு கிடைக்கப்பெறல்
    - குறைந்தளவு உழைப்பு போதுமானதாக அமைதல்
    - உணவுக்கு செலவு ஏற்படாமை
    - முட்டையோடு தடிப்பானதால் பாதிப்பு ஏற்படுவது குறைவு
    - குறைந்த செலவுடன் ஆரம்பிக்கலாம்
    - உற்பத்தி செலவு குறைவு

www.lkedu.lk

டிசம்பர் - 2016 (பகுதி – 2)

01) இலங்கையரின் பிரதான உணவுப் பயிரான நெல்லின் மூலமாக சக்தி தேவை பிரதானமாக ஈடுசெய்யப்படுகிறது முறையாக திட்டமிடப்பட்ட வீட்டுத்தோட்டத்தை மேற்கொள்வதன் மூலமாக பிற உணவுப் பயிர்களை உற்பத்தி செய்ய முடிவதுடன் குடும்ப அங்கத்தவர்களுக்கு சமநிலையான உணவு கிடைக்கும்

1. குடும்பத்தின் வேளை உணவில் புரதத்தை வழங்குவதற்கென வீட்டுத் தோட்டத்தில் செய்கைபண்ணக் கூடிய பயிர்கள் **இரண்டைப்** பெயரிடுக
   - பயறு கௌபீ உழுந்து துவரை
   - சிறகவரை போஞ்சி பயற்றை சோயா அவரை

2. சிறிய வீட்டுத்தோட்டமொன்றில் இடைப்பண்படுத்தலை மேற்கொள்வதற்கெனப் பயன்படுத்தகூடிய உபகரணங்கள் **இரண்டைப்** பெயரிடுக
   - மண்வெட்டி முள்ளுமண்வெட்டி
   - கைமுள் கைக்கரண்டி
   - மும்முனைப் பண்படுத்தி
   - கையினால் இயக்கும் ஹோ வகைகள் (சுவிஸ் ஹோ, சொப்பிங் ஹோ)

3. வீட்டுத்தோட்டத்தில் பூச்சி பீடைகளை கட்டபடுத்துவதற்கு வீட்டிலேயே தயார்செய்யக்கூடிய இரசாயனம் அல்லாத பீடைநாசினிகள் **இரண்டைக்** குறிப்பிடுக
   - வேப்பம் வித்துச்சாறு
   - கொச்சிமிளகாய்ச்சாறு
   - மண்ணென்னெய் கலந்த சவர்க்கார கலவை
   - பொன்னலரிச்சாறு
   - வெள்ளைப்பூண்டுச்சாறு
   - அன்னமுன்னாச்சாறு
   - புகையிலைச்சாறு
   - பப்பாசிச்சாறு

4. a. பாத்தி நாற்றுமேடையுடன் ஒப்பிடுகையில் நெரிடோக்கோ நாற்றுமேடை முறையிலுள்ள அனுகூலம் யாது?
   - வேர்களுக்கு சேதம் ஏற்படாதவாறு நாற்றுக்களைப் பெறலாம்
   - பிடுங்கி நடுவதற்கு தாக்குபிடிக்காத பயிர்களுக்கு சிறப்பாக பயன்படுத்தலாம்
   - தேவையான வித்தக்களின் அளவு குறைவு

   b. நெரிடோக்கோ நாற்றுமேடை ஊடகக் கலவையைத் தயாரிக்கத் தேவையான பதார்த்தங்கள் மற்றும் அவற்றின் விகிதங்கள் ஆகியவற்றை எழுதுக
   - மேல்மண் மற்றும் கூட்டெரு / உக்கிய மாட்டெரு
   - 1 : 1 விகிதம்

5. பயிர்களில் ஏற்படும் நைதரசன் குறைபாட்டை நீக்குவதற்கென மண்ணுக்கு இடத்தக்க இரசாயனப் பசளை வகைகள் **இரண்டைப்** பெயரிடுக
   - யூரியா $=CO(NH_2)_2$

www.ikeduk

- அமோனியம் சல்பேற்று $(NH_4)_2SO_4$

6. மண்ணின் நீர்வடிப்புக் குறைவடைவதனால் பயிர்ச்செய்கைக்கு ஏற்படத்தக்க பாதிப்பான நிலைமைகள் **இரண்டு** எழுதுக
    - மண் வளி குறைவடைதல்
    - நச்சு வாயுக்கள் உருவாதல்
    - வேர்களின் தொழிற்பாடு நலிவடைவதனால் தாவரம் வாடுதல் / இறத்தல்
    - விவசாய உபகரணங்கள் பயன்படுத்துவதில் சிரமம் ஏற்படல்
    - வேர்களில் பங்கசு நோய்கள் ஏற்படல்
    - நன்மை தரும் நுண்ணங்கிகளின் நிலவுகைக்கு தடையேற்படல்
    - மண்ணின் பௌதீக, இரசாயன இயல்புகள் குன்றுதல்
    - சேதனப் பசளைகள் இடப்படின் பாதகமான விளைவுகள் ஏற்படும்
    - தாவரவேர்கள் ஆழமாக ஊடுருவாகாமையினால் வரட்சியைத் தாங்காது

7. a. மண்கட்டமைப்பு என்பதால் கருதப்படுவது யாது?
    - இயற்கையான நிலைமைகளின்கீழ் மண்துணிக்கைகள் ஒன்று சேர்ந்து மண்திரள்கள் ஒழுங்கமைந்துள்ள விதமே மண் கட்டமைப்பு எனப்படும்

    b. இலங்கையில் காணப்படும் பிரதான மண் கட்டமைப்பு வகைகள் **மூன்றைக்** குறிப்பிடுக
    - தனிமணியுரு
    - உபகோணவுரு
    - நிரலுரு
    - சிறுமணியுரு

8. பாரம்பரிய நெற்பேதங்களுடன் ஒப்பிடுகையில் திருந்திய நெற்பேதங்கள் கொண்டுள்ள இயல்புகள் **இரண்டை** எழுதுக
    - குட்டையாக வளரும் / குறைவாக வளரும்
    - பாட்டத்தில் சாயாது
    - அதிக விளைச்சல் தரும்
    - இலை அகன்று நிமிர்ந்து காணப்படும்
    - நெல் வைக்கோல் விகிதம் கூடியது
    - ஒளிக்கால தூண்டற்பேறு அற்றது
    - அநேகமான நெற்பேதங்களில் வித்து உறங்குநிலை காணப்படாது
    - அதிகளவில் பீடைத்தாக்கத்திற்கு உட்படும்

9. நெற்செய்கையில் களைகள் உருவாவதை தவிர்ப்பதற்கு கைக்கொள்ளத்தக்க இரசாயனம் அல்லாத நடவடிக்கைகள் **இரண்டைக்** குறிப்பிடுக
    - தூய விதை நெல்லைப் பயன்படுத்தல்
    - கால்வாய்களைச் சுத்தப்படுத்தல்
    - வரம்புகளைச் சுத்தப்படுத்தல்
    - நிலத்தை நன்றாக உழுதல்
    - நீரைத் தேக்கி வைத்தல்
    - முதல் முப்பது நாட்களினுள் பயிருக்கு போதிய போசணை வழங்கள்

www.lkedu.lk

- வயலை நன்கு மட்டப்படுத்தல்

10. முட்டை உற்பத்திகென வளர்ப்பதற்க சிபாரிசு செய்யப்படும் கோழிவர்க்கங்கள் **இரண்டைப்** பெயரிடுக
    - லொகோன்
    - ஹைசெக்ஸ் (வெள்ளை)
    - ஹைலைன் (வெள்ளை)
    - ஹைசெக்ஸ் (கபிலம்)

www.lkedu.lk

டிசம்பர் - 2015 (பகுதி – 2)

01. விவசாய முயற்சிகளிலிருந்து அதிக அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நிலத்தின் நீடித்த நிலைப்பு, கால்நடை வளர்ப்பு, பயிர்ச்செய்கை முகாமைத்துவ நடைமுறைகள் ஆகியன பற்றி அதிக கவனம் செலுத்த வேண்டும்

1. பயிர்ச்செய்கைக்கென ஆரம்ப நிலம்பண்படுத்தலை மேற்கொள்வதனால் கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டு** எழுதுக
   - தாவர வளர்ச்சிக்குப் பொருத்தமான மண் சூழலை ஏற்படுத்தல்
   - கற்கள், வேர்கள் போன்ற கரடுமுரடான பதார்த்தங்களை அகற்றல்
   - மண்ணைத் தூர்வையாக்கல்
   - நீர் பற்றுந்திறனை அதிகரித்தல்
   - நீர் வடிப்பை விருத்தி செய்தல்
   - நோய்கள், பூச்சி பீடைகள், களைகள் ஆகியவற்றைக் கட்டுபடுத்தல்
   - மண்ணின் பௌதிக உயிரியல் இயல்புகளை விருத்தி செய்தல்
   - நீர்ப்பாசனத்திற்கேற்றவாறு களத்தை தயார் செய்தல்
   - விவசாய உபகரணங்களைப் பயன்படுத்தல் இலகு

2. a) 'மண்ணரிப்பு' என்றால் என்ன?
   - மண் துணிக்கைகள் மண் உடலிலிருந்து வேறாக்கப்பட்டு வேறோரிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு படிதல் மண்ணரிப்பு எனப்படும்.

   b) மட்காப்புக்கென பயன்படுத்தப்படும் விவசாய முறைகள் **இரண்டு** எழுதுக
   - சமவுயரக் கோட்டில் நாற்றுக்களை நாட்டுதல்
   - மண்ணிற்கு சேதனப் பசளையிடல்
   - மூடுபயிர் வளர்த்தல்
   - இழிவுப் பண்படுத்தல்
   - மண்ணுக்கு பொருத்தமானவாறு பயிரைத் தெரிவு செய்தல்
   - சோல்ற் (SALT) வேலி அமைத்தல் (இரட்டை வரிசை)

3. a) பயிர்ச்செய்கையில் நீர்ப்பாசனம் என்றால் என்ன?
   - பயிர்ச்செய்கைக்கு மழையின் மூலம் இயற்கையாகக் கிடைக்கின்ற நீர் போதுமானவளவு கிடைக்காத போது அக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்குச் செயற்கையான முறையின் மூலம் நீரை வழங்குதல் நீர்ப்பாசனம் எனப்படும்

   b) பயிர்ச்செய்கையில் பயன்படுத்தப்படும் மேற்பரப்பு நீர்ப்பாசன முறைகள் **இரண்டைப்** பெயரிடுக
   - பரவல் நீர்ப்பாசன முறை / வெள்ளப்படுத்தல்
   - நிரல் நீர்ப்பாசனம்
   - சால் நீர்ப்பாசனம்
   - பாத்தி நீர்ப்பாசனம்
   - மோதிரவடிவ நீர்ப்பாசனம்

www.ikdu.lk

4. மண்ணீர்க் காப்புக்கென மேற்கொள்ளத்தக்க நடைமுறைகள் **இரண்டு** எழுதுக
    - மண்ணிற்கு மூடுபடையிடல்
    - மண்ணிற்கு சேதனப் பதார்த்தங்களையிடல்
    - மூடுபயிர்களை வளர்த்தல்
    - களையகற்றல்

5. a) வித்து முளைத்தலுக்குத் தேவையான காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக
    - நீர்
    - வளி
    - வெப்பநிலை
    - வித்து வாழ்தகவு

    b) 'வித்து உறங்குநிலை' என்றால் என்ன?
    - வித்து முளைத்தலுக்குத் தேவையான அனைத்துக் காரணிகளும் சிறப்பான நிலையில் கிடைத்த போதிலும் உயிருள்ள வித்து முளைக்காமை வித்து உறங்குநிலை எனப்படும்

6. a) குக்கர்பீற்றேசியே குடும்பப் பயிர்களின் காய்களுக்கு அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்தும் பூச்சி பீடையொன்றைப் பெயரிடுக
    - குக்குபிற்றே ஈ/ பழ ஈ

    b) அந்த பூச்சியினால் அக்காய்களுக்கு ஏற்படுத்தும் பாதிப்பின் தன்மையை விளக்குக
    - இளம் காய்களைத் துளைத்து அதனுள் முட்டைகளை இடுதல்
    - குடம்பிகள் காய்களின் சதைப்பற்றான பாகங்களை உண்ணல்
    - காய்கள் அழுகி வீணாதல்

7. இலங்கையின் உலர்வலயத்தில் வளர்க்கப் பொருத்தமானதெனச் சிபாரிசு செய்யப்படும் கறவை மாட்டு வர்க்கங்கள் **இரண்டு** எழுதுக
    - சிந்தி
    - சகிவால்
    - சுதேச இந்திய கலப்பு வர்க்கம்

8. நுண்ணங்கிகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் பாலுணவு வகைகள் **இரண்டைப்** பெயரிடுக
    - யோகட்
    - தயிர்
    - சீஸ் (பாற்கட்டி)

9. a) பற்றீரியா மூலம் கோழிகளுக்கு அதிகளவில் ஏற்படும் நோயொன்றைப் பெயரிடுக
    - புள்ளோரம்

www.ikeu.lk

b) அந்நோயின் நோயறிகுறிகள் **இரண்டைக்** குறிப்பிடுக

- கழிவறையைச் சுற்றி வெள்ளை நிற பதார்த்தம் ஒட்டி காணப்படல்
- வெண்ணிறமான கழிச்சல்
- சிறகு சிலிர்த்துக் காணப்படல்
- உற்பத்தி குறைதல்
- பறவைகள் சோர்வடைதல்
- குஞ்சுகள் இறத்தல்

10. a) கனகூள முறையில் கோழிவளர்ப்பை மேற்கொள்வதன் அனுகூலங்கள் **இரண்டு** எழுதுக

- சிறிய நிலப்பரப்பில் அதிக எண்ணிக்கையான கோழிகளை வளர்க்கலாம்
- கோழிகளுக்குப் பாதுகாப்பு கிடைத்தல்
- உரிய உணவுகளையும் நீரையும் இலகுவாக வழங்கலாம்
- கனகூளத்தில் விற்றமின் - B சிக்கல் தொகுக்கப்படும்
- இரைகௌவிகளால் ஏற்படும் சேதங்கள் குறைதல்
- கனகூளத்தைப் பசளையாகப் பயன்படுத்த முடியும்
- பொருத்தமற்ற கோழித் தொகுதிகளை இலகுவாக அகற்றலாம்
- அயலவர்க்கோ பயிர்களுக்கோ பாதிப்பு ஏற்படாது
- உணவு வீண்விரயம் தவிர்க்கப்படும்
- முட்டைகளுக்கு ஏற்படுகின்ற சேதம் குறைவு

b) புரதத்தை வழங்குவதற்கென, கோழியின் உணவுப் பங்கீட்டுடன் சேர்க்கப்படத்தக்க உணவுப் பொருட்கள் **இரண்டு** எழுதுக

- கருவாட்டுத்தூள்
- பயறு
- கடலை
- கௌபீ
- பிண்ணாக்கு

www.ketuk

டிசம்பர் - 2014 (பகுதி – 2)

01) பயிர்ச்செய்கையின்போது உச்ச விளைச்சலைப் பெறுவதற்குப் நிலம்பண்படுத்தல் தொட்டு அறுவடை வரையான சகல கருமங்களும் சிறப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறே ஆரோக்கியமானதும் திடகாத்திரமானதுமான நாற்றுக்களைப் பெறுவதற்கு நாற்றுமேடைப் பரராமரிப்பு இன்றியமையாததாகும்.

1. a) மரக்கறிப் பயிர் நாற்றுக்களைப் பெறுவதற்கென அமைக்கப்படும் பாத்தி நாற்றுமேடையின் நியம அகலம் எவ்வளவாகும்?
   - 1 மீற்றர்

   b) இவ்வாறு நியம அகலத்தில் நாற்றுமேடையை அமைப்பதற்கான காரணம் யாது?
   - பின்கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது இலகு

2. a) உலர்வலயத்தில் சிறுபோகத்தில் அமைக்க உகந்த பாத்தி நாற்றுமேடை வகை யாது?
   - தாழ் பாத்தி

   b) இந்த வகைப் பாத்தி நாற்றுமேடை பொருத்தமாக அமையக் காரணம் யாது?
   - நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக

3. நாற்றுமேடைப் பாத்தியைத் தொற்றுநீக்கப் பொருத்தமான முறையைக் குறிப்பிட்டு அதனைச் சுருக்கமாக விளக்குக
   - எரித்தல் மூலம்
   - சூரிய ஒளி மூலம்
   - இரசாயன முறை மூலம்

   எரித்தல் மூலம் தொற்று நீக்கல்

   நாற்றுமேடையை நன்றாக ஈரமாக்கியபின் வைக்கோலையும் உமியையும் படைபடையாக இட்டு காற்று வீசும் திசைக்கு எதிர்த்திசையில் தீயை மூட்டுவதன் மூலம் மண்ணில் உள்ள நோய்க் கிருமிகள் அழிக்கப்படும்.

   சூரிய ஒளி மூலம் தொற்று நீக்கல்

   நாற்றுமேடையை நன்றாக ஈரமாக்கியபின் ஒளி ஊடுபுகக்கூடிய பொலித்தீனால் மேடையை மூடிவிடல் வேண்டும். பொலித்தீன் விளிம்புப் பகுதிகள் முற்றாக மூட வேண்டும்


   இரசாயனம் மூலம் தொற்று நீக்கல்

   மீதையில் புறோமைட்டை பயன்படுத்தி தூபமாக்கல் மூலம் மண்ணை தொற்றுநீக்கல் அல்லது பங்கசு நாசினியை மண்ணுடன் கலத்தல் மூலம் தொற்று நீக்கல்

4. நாற்றுமேடையில் இடப்படாது நேரடியாக வயலில் நடப்படும் பயிர்கள் **நான்கு** தருக
   - பயற்றை, போஞ்சி, அவரை, பயறு, கௌபி, நிலக்கடலை, கெக்கரி, சோளன், கரட், முள்ளங்கி, பூசனி, பாகல்,பீர்க்கு, புடோல், வெண்டி

5. மரக்கறிப் பயிர்களுக்கு நோய் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் **நான்கைக்** குறிப்பிடுக
    - ஆரோக்கியமான நடுகைப்பொருட்களைப் பயன்படுத்தல்
    - வித்துக்களை பரிகரித்து நாட்டுதல்
    - நாற்றுமேடையை தொற்று நீக்கல்
    - பாதுகாப்பு இல்லங்களில் வளர்த்தல்
    - களைகளைக் கட்டுப்படுத்தல்
    - நோய்க் காவிகளை அழித்தல்
    - சமச்சீரான பசளைப் பிரயோகம்
    - நோயுற்ற தாவரங்களை அகற்றல்

6. பழ ஈயைக் கட்டுபடுத்தப் பயன்படுத்தப்படும் பெரமோன் பொறியின் வரிப்படத்தினை வரைந்து பாகங்களைப் பெயரிடுக
    - பெரமோன் பொறி



7. பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமான நீர்ப்பாசன முறையைத் தெரிவு செய்யும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் **நான்கைக்** குறிப்பிடுக
    - பயிர் வகை
    - தரைத்தோற்றம்
    - பயிரிடப்படும் பயிர்
    - மண்ணின் இயல்புகள்
    - நீர் முதலிலுள்ள நீரின் அளவு
    - பொருளாதார நிலை

8. விவசாயத்தில் நீர்வடிப்புக் குறைவு காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் **இரண்டை** எழுதுக
    - வேர் வளர்ச்சி பாதிப்படைதல்
    - வேர் அழுகல்
    - இலைகள் மஞ்சள் நிறமடைதல்
    - பயிர்கள் இறத்தல்
    - பசளைகள் இழக்கப்படல்
    - மண் காற்றோட்டம் குறைவடையும்
    - வேர்ச் சுவாசத்திற்கான ஒட்சீசன் கிடைக்காது
    - தாவரங்கள் இலகுவில் சாயும்
    - சேதனப்பொருட்கள் அழுகலடைவதால் நஞ்சு வாயுக்கள் உருவாகும்
    - விவசாய உபகரணங்கள் பயன்பாடு கடினம்
    - மண் இரசாயன இயல்புகள் மாற்றமடையும்
    - தாவர வேர்களில் பங்கசு நோய் ஏற்படும்
    - மண் வெப்பநிலை குறைவடையும்

www.ikedu.lk

9. a) களைகள் என்றால் என்னவென வரைவிக்கணப்படுத்துக

   - நாம் விரும்பி பயிர் செய்யும் பயிர்கள் தவிர்ந்த அந்நிலத்தின் சுயமாக வளரும் எந்த வகைத் தாவரங்களும் களைகள் எனப்படும்

   b) இரசாயன களைக்கட்டுப்பாட்டினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் **இரண்டை** எழுதுக

   - சூழல் மாசடைதல்
   - பயிரிடப்படும் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படல்
   - விளைபொருட்களுடன் நச்சுப் பொருட்கள் சேர்தல்
   - இயற்கை எதிரிகள் அழிவடைதல்
   - களைநாசினிகள் நீரில் கலப்பதால் வெவ்வேறு வகை நோய்கள் ஏற்படும்

10. a) மண் அமிலத்தன்மையடைவதற்கான காரணங்கள் **இரண்டு** தருக

    - அதிக மழைவீழ்ச்சி காரணமாக போசணைப் பொருட்கள் கழுவிச் செல்லப்படல்
    - அமோனியம் சல்பேற்று பாவனை
    - சேதனப்பொருட்கள் சிதைவடைவதன் மூலம்
    - மண் நுண்ணங்கிகளின் தொழிற்பாடு காரணமாக அமிலம் உருவாதல்

    b) மண்ணின் அமிலத்தன்மையை நீக்கப் பயன்படுத்தப்படும் பதார்த்தம் யாது?

    - சுண்ணாம்பிடல் (கல்சியம் காபனேற்று, கல்சியம் ஒக்சைட்டு)
    - டொலமைற்று இடல்
    - சிப்பித்தூள் இடல்

www.ikdu.lk

டிசம்பர் - 2013 (பகுதி – 2)

01. தாழ்நாட்டு உலர்வலய விவசாயி ஒருவர் தனது 2 ஹெக்ரயர் அளவான மேட்டு நிலத்தையும் ½ ஹெக்ரயர் வயல் நிலத்தையும் ஒன்றிணைந்த பண்ணையாக படிப்படியாக கட்டியெழுப்ப விரும்புகின்றார். ஆரம்பத்தில் நான்கு பயிர் சுழற்சி முறையிலும் குறுங்கால பயிர்களையும் செய்கைப் பண்ணவும் கறவைப் பசு ஒன்றை வளர்க்கவும் நடவடிக்கை எடுத்தார்.

1. இப்பண்ணையில் தாபித்த மரக்கறிச் செய்கையின் களைகளை அகற்ற இயந்திரங்களைப் பயன்படுத்தக்கூடிய **இரண்டு** முறைகளைக் குறிப்பிடுக

- **பொறிமுறை களைக்கட்டல் முறைகள்**

  கையால் பிடுங்குதல்

  மண்வெட்டியால் செதுக்குதல் / முள்மண்வெட்டி / சொரண்டி பயன்படுத்தல்

  மூடுபடையிடல்

  மண்ணைப் புரட்டுதல் / கைமுள் / ஹோ உபகரணம் பயன்படுத்தல்

2. அகற்றிய களைகளிலிருந்து பெறக்கூடிய **இரண்டு** பயன்களைக் குறிப்பிடுக

- கூட்டெரு தயாரித்தல்
- மூடுபடையாகப் பயன்படுத்தல்
- மூலிகையாகவும் உணவாகவும் பயன்படுத்தல்
- பசுந்தாட் பசளையாக பயன்படுத்தல்
- விலங்குணவாக பயன்படுத்தல்

3. இப்பண்ணையின் நான்கு பயிர்ச் சுழற்சி முறையை பின்பற்றுவதாயின் பொருத்தமான பயிர் வகைகள் **நான்கை** விதந்துரைக்க

- தானியப் பயிர் - குரக்கன், நெல், சோளம்
- அவரையப் பயிர் - போஞ்சி, பயற்றை, கௌபி, பயறு, சோயா
- கிழங்குப் பயிர் - மரவள்ளி, வற்றாளை
- மரக்கறிப் பயிர் - பீர்க்கு, புடோல், கத்தரி, கறிமிளகாய், வெண்டி, கெக்கரி, தக்காளி, பிப்பிஞ்சா

4. இப்பண்ணையில் வயல் நிலத்தில் சிறுபோகத்தில் நீர்ப்பாசனத்தின் மூலம் நெற்செய்கை பண்ணுவதாயின் விவசாயி பின்பற்றக்கூடிய நீர்ப்பாசன முறை என்ன? குறித்த முறையின் ஓர் அனுகூலத்தையும் ஒரு பிரதிகூலத்தையும் குறிப்பிடுக

நீர்ப்பாசன முறை– பரவல் நீர்ப்பாசனம் / வெள்ளப்படுத்தல்

அனுகூலங்கள்

- மூலதனச் செலவு குறைவாகும்
- விசேட தொழிநுட்பறிவு அவசியமில்லை
- களைக்கட்டுபாட்டிற்கு சிறந்த முறையாகும்
- தொழிலாளர் தேவை குறைவாகும்
- நீரைக் கொண்டு செல்ல வாய்க்கால்கள் அவசியமில்லை

பிரதிகூலங்கள்

- அதிக நீர் தேவைப்படல்
- நீர் விரயம் அதிகமாகும்
- மண்ணரிப்பு ஏற்படும்
- தரை மட்டமாக இருக்க வேண்டும்
- களைகள், நோய்கள் பரவ ஏதுவாக அமையும்

www.kedu.lk

5. பெரும்போகத்தில் நெற்செய்கை பண்ணுவதற்கு விவசாயி எம்மாதங்களில் நிலத்தைப் பண்படுத்த வேண்டும்
   - செப்டம்பர்
   - ஒக்டோபர்
   - நவம்பர்

6. அதிக பால் உற்பத்தியைப் பெறுவதற்கு இப்பண்ணையில் வளர்க்கக்கூடிய கறவைப் பசு வர்க்கங்கள் **இரண்டைப்** பெயரிடுக
   - சிந்தி
   - சகிவால்
   - உள்ளூர் x ஐரோப்பிய கலப்பினங்கள்
   - இந்திய x ஐரோப்பிய கலப்பினங்கள்
   - AMZ
   - AFS

7. அறுவடைக்குப் பிந்திய அழிவை இழிவளவாக்க மரக்கறிகளை அறுவடை செய்யும்போது விவசாயி பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக
   - உரிய முதிர்ச்சி நிலையின்போது அறுவடை செய்தல்
   - பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்தி பொருத்தமான முறையில் அறுவடை செய்தல்
   - நாளின் உரிய நேரத்தில் அறுவடை செய்தல்
   - சேதம் ஏற்படாமல் அறுவடை செய்தல்
   - பொருத்தமான காலத்தில் அறுவடை செய்தல்

8. இப்பண்ணையில் உற்பத்தி செய்கின்ற மரக்கறிகளை நற்காப்பு செய்யக்கூடிய **இரண்டு** முறைகளைக் குறிப்பிடுக
   - உலர்த்துதல் - வெண்டி, பாகல்
   - சோஸ் தயாரித்தல் - மிளகாய், தக்காளி
   - அச்சாறு தயாரித்தல் - மிளகாய்
   - குளிரூட்டல்
   - ஜாம் தயாரித்தல் - பூசணி, நீற்றுப் பூசணி

9. ஒன்றிணைந்த பண்ணையாக இப்பண்ணையை விருத்தி செய்வதற்கு இப்பண்ணையில் சேர்க்கப்பட வேண்டிய மேலும் **இரண்டு** அம்சங்களைக் குறிப்பிடுக
   - மீன் வளர்ப்பு தாரா வளர்ப்பு ஆடுவளர்ப்பு
   - கூட்டெரு தயாரித்தல் கோழி வளர்ப்பு பன்றி வளர்ப்பு
   - உயிர்வாயு தயாரித்தல் / வலு உற்பத்தி

10. இதனை ஒன்றிணைந்த பண்ணையாக விருத்தி செய்வதனால் விவசாயி பெறும் **இரண்டு** பயன்களைக் குறிப்பிடுக
    - கழிவுப் பொருள்கள் மீள்சுழற்சிக்கு உள்ளாக்கப்படல்
    - நிறையுணவு கிடைக்கும்
    - சூழல் மாசடையாது
    - நிலத்தின் வினைத்திறன் அதிகரிக்கும்
    - உற்பத்திச் செலவு குறைவாகும்

www.ikeou.lk

டிசம்பர் 2012 (பகுதி – 2)

01. விவசாயி ஒருவர் ஈர வலயத்தில் 3 ஹெக்ரயர் அளவான சிறிது சாய்வான நிலத்தில் அமைந்துள்ள தென்னை தோட்மொன்றை (விலங்கு பயிர் சுழற்சி) பண்ணையொன்றை தயாரிப்பதற்குப் பயன்படுத்தினார். அவர் மேற்படி காணியில் 1 ½ ஹெக்ரயர் அளவான நிலத்தில் புல்லை வளர்த்து மாடுவளர்ப்பிற்கும் மீதி 1 ஹெக்ரயர் காணியை பயிர் செய்கைக்காகவும் பயன்படுத்தினார்.

1. a) பயிர்ச் செய்கைக்காக இந்நிலத்தை தயார் செய்ய நான்கு சில்லுடைய உழவு இயந்திரத்தைப் பயன்படுத்துவராயின் அதற்குப் பொருத்தமான கலப்பை வகையொன்றின் பெயரைக் குறிப்பிடுக
    - வட்டத்தட்டுக் கலப்பை
    - இறகுக் கலப்பை (மோல்போட் கலப்பை)

    b) உழுத வயல்மண்ணை தூர்வையாக்க நான்கு சில்லு உழவு இயந்திரமொன்றில் பொருத்தக்கூடிய விவசாய உபகரணமொன்றின் பெயரைக் குறிப்பிடுக
    - முட்கலப்பை
    - வட்டத்தட்டு ஹரோ
    - சுழல் கலப்பை

2. இவ்விவசாயப் பண்ணையில் வளர்க்க உகந்த பாற்பசு வகையொன்றைக் குறிப்பிடுக
    - ஜேர்சி
    - சிந்தி
    - சகிவால்
    - AMZ
    - ஐரோப்பிய உள்ளூர் கலப்பினங்கள்
    - ஐரோப்பிய இந்திய கலப்பினங்கள்

3. இவ்விவசாயப் பண்ணையில் செய்கை பண்ண உகந்த பெபேசியே (பருப்பு) பயிர் வகைகள் **இரண்டைக்** குறிப்பிடுக
    - பயற்றை
    - சிறகவரை
    - போஞ்சி
    - புசிற்றா
    - அவரை

4. இங்கு தெண்ணைச் செய்கையின் இனப்பயிராகச் செய்கை பண்ண உகந்த பழப்பயிர்கள் **இரண்டைக்** குறிப்பிடுக
    - அன்னாசி கொடித்தோடை
    - வாழை றம்புட்டான்
    - பப்பாசி மா

www.lkedu.lk

5. இங்கு செய்கை பண்ணிய பயிர்களின் இடைப் பண்படுத்தலுக்கு உட்படும் செயற்பாடுகள் **இரண்டை** எழுதுக
    - களைக்கட்டுப்பாடு
    - மண்ணைத் தூர்வையாக்கல்
    - மண் அணைத்தல்
    - பசளையை மண்ணுடன் கலத்தல்

6. இக்காணியில் பயன்படுத்தக்கூடிய மட்காப்பு முறைகள் **மூன்றைக்** குறிப்பிடுக
    - சமவுயரக் கோட்டில் பயிரிடல்
    - சமவுயரக் கோட்டு வடிகால் அமைத்தல்
    - சமவுயரக் கோட்டு வரம்புகள் அமைத்தல்
    - சமவுயரக் கோட்டு குறுக்காக உழுதல்
    - மண்திட்டுக்கள் அமைத்தல்
    - மூடுபயிர்ச்செய்கை
    - சேதனப் பொருட்கள் சேர்த்தல்
    - இழிவுப் பண்படுத்தல்

7. இப்பண்ணையில் நாற்றுமேடையொன்றை ஆரம்பிப்பீர்களாயின் அங்கு நடும் தண்டுகளில் வேர்முளைத்தலை தூண்ட பயன்படுத்தகூடிய இரசாயனப் பொருட்கள் **இரண்டைக்** குறிப்பிடுக
    - இன்டோல் அசற்றிக்கமிலம்
    - இன்டோல் பியுற்றிக்கமில்
    - செக்டோ
    - ரூட்டோன்

8. இக்காணி மண்ணின் PH பெறுமானம் 5 ஆயின் அதனை நடுநிலை மண்ணாக எவ்வாறு மாற்றலாம்?
    - சுண்ணாம்பு இடல்
    - கல்சியம் காபனேற்று இடல்
    - கல்சியம் ஐதரொட்சைட்டு இடல்
    - கல்சியம் ஒக்சைட்டு இடல்
    - டொலமைட் இடல்
    - சிப்பித்தூள் இடல்

9. இப்பண்ணையின் பயிர்களுக்கு சேதனப்பசளையிடுவதனால் பெறக்கூடிய **நான்கு** நன்மைகளைக் குறிப்பிடுக
    - பயிர் வளர்ச்சிக்குத் தேவையான போசணை மூலகங்கள் அனைத்தும் கிடைக்கும்
    - மண் காற்றூட்டல் அதிகரிக்கும்
    - மண்ணின் மணி உருவாதல் அதிகரிக்கும்
    - நீர்பற்றுந்திறன், நீர்வடிப்பு அதிகரிக்கும்
    - நுண்ணங்கிகளின் தொழிற்பாடு அதிகரிக்கும்
    - கற்றயன் மாற்றீட்டுக் கொள்ளளவு அதிகிக்கும்

www.ikedu.lk

- நீண்ட காலத்திற்கு மண்ணிற்கு போசணை கிடைக்கும்
- மண்ணின் PH பெறுமானம் சீராக பேணப்படும்

10. இப்பண்ணையை விலங்குப் பயிர் சுழற்சிப் பண்ணையாக தாபிப்பதனால் பெறும் நன்மைகள் **மூன்றைக்** குறிப்பிடுக
    - உயிர்வாயு உற்பத்தி
    - சேதனப்பசளை பெறல்
    - நிலத்தின் வினைத்திறன் அதிகரிக்கும்
    - பயிர் விலங்கு உற்பத்திகளைப் பெறலாம்
    - வேலையாட்களை வினைத்திறனாகப் பயன்படுத்தலாம்
    - கால்நடைகளின் சிறுநீர், மலம் ஆகிவற்றினால் மண் வளமடையும்
    - நோய் பீடைத் தாக்கம் குறைவடையும்
    - அவரையினப் பயிர்களினால் மண்ணில் நைதரசன் பதிக்கப்படும்
    - மண் வளம் பேணப்படும்
    - பண்ணைக் கழிவுகள் மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படும்
    - உற்பத்திச் செலவு குறைவடையும்

www.lkedu.lk

டிசம்பர் - 2011 (பகுதி – 2)

01. 'திவிநகும' எனும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் ஈரவலயத்தில் வீட்டுத் தோட்டச் செய்கையை ஆரம்பித்த விவசாயி ஒருவர் தனது வீட்டுத்தோட்டத்தில் மிளகாய், கத்தரி, பூசணி, பீர்க்கு, புடோல், வல்லாரை, பொன்னாங்கனி, வற்றாளை, மரவள்ளி, நிலக்கடலை, வாழை ஆகியவற்றை பயிரிட்டார்

1. மேற்கூறப்பட்ட பயிர்களுள் பின்வரும் பாத்தி வகைகளில் நாட்ட சிபாரிசு செய்யப்படும் பயிர் வகைகள் **இரண்டு** வீதம் எழுதுக
   a) உயர் பாத்தி - மிளகாய், கத்தரி
   b) தாழ் பாத்தி - வல்லாரை, பொன்னாங்கனி
   c) வரம்புசால் பாத்தி - வற்றாளை, நிலக்கடலை
   d) தனிப் பயிர்ச்செய்கை குழிகள் - வாழை, பூசணி, மரவள்ளி

2. இப்பயிர்களுள் நாற்றுமேடையில் இட்டு நாற்றுக்கள் வயலில் நடப்படும் பயிர்கள் **இரண்டு** தருக
   - கத்தரி, மிளகாய்

3. இப்பயிர்களுக்கு அடிக்கட்டுப் பசளையாக இடத்தக்க சேதனப் பசளை வகைகள் **நான்கு** தருக
   - மாட்டெரு
   - பசுந்தாட் பசளை (இலைப் பசளை)
   - கூட்டெரு
   - ஆட்டெரு
   - கோழியெரு
   - பண்ணைப் பசளை
   - விலங்கு தாவரக் கழிவு

4. இப்பயிர்களுக்கு சேதனப் பசளை இடுவதனால் கிடைக்கும் அனுகூலங்கள் **நான்கு** தருக
   - தாவரப் போசணைக்கு அவசியமான எல்லா போசணைப் பதார்த்தங்களும் அடங்கியிருத்தல்
   - மண் கட்டமைப்பு விருத்தியடைதல்
   - மண்ணின் நீர்பற்றும் கொள்ளளவு விருத்தியடைதல்
   - கற்றயன் மாற்றீட்டுக் கொள்ளளவு அதிகரித்தல்
   - தாங்கல் ஊடகமாக தொழிற்படல் / PH
   - வீட்டிலேயே தயாரித்துக் கொள்ள முடியும்
   - சூழல் மாசடைதல் தவிர்த்தல்
   - அந்நிய செலாவணி மீதமாதல்
   - மண்வளி ஊட்டல் அதிகரித்தல்
   - மண் நுண்ணங்கி தொழிற்பாடு அதிகரித்தல்
   - மண் வெப்பநிலை பேணப்படல்

www.lkedu.lk

5. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வாழை, வெண்டி ஆகிய பயிர்களைத் தாக்கக்கூடிய வைரசு நோய் **ஒவ்வொன்று** தருக
    - •வாழை– கொத்துமுனை நோய், குருமன்
    - •வெண்டி - இலை பன்னிறப்படல் (மொசைக்), சித்திர வடிவ நோய்

6. இந்தப் பயிர்களுள் அவுலக்கப்போறா பூச்சியால் பாதிக்கப்படக்கூடிய பயிர்கள் **இரண்டு** தருக
    - •பீர்க்கு, புடோல், பூசணி

7. இவ்விவசாயி வாழையின் நடுகைப் பொருளாக பயன்படுத்தத்தக்க உறிஞ்சி வகை யாது?
    - •வாள் உறிஞ்சி, வால்குட்டி

8. இந்த நிலத்தில் நீர்வடிப்பை மேம்படுத்தவென அமைக்கக்கூடிய வடிகால் தொகுதி வகையைப் பெயரிடுக
    - •சமாந்தர வடிகால்
    - •கிறிட் அயன் (சட்டகப் படல்) முறை
    - •ஹெரிங் மீன் முள்ளுமுறை
    - •இயற்கை முறை

9. இப்பயிர்களுள் நீர்வடிப்பு குறைவான மண்ணில் பயிரிடக்கூடிய பயிர்கள் **இரண்டைத்** தருக
    - •வல்லாரை, பொன்னாங்கனி

10. இந்தப் பயிர்செய் நிலத்தில் களைகள் வளர்வதால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் **நான்கு** தருக
    - •பயிருடன் நீர், போசணை, இடம், சூரியஒளி ஆகியவற்றுக்கு போட்டியிடல்
    - •நோய் பீடைகளுக்கு விருந்து வழங்கியாகச் செயற்படல்
    - •விளைச்சலின் தரமும், அளவும் குறைவடைதல்
    - •முட்கள் கொண்ட களைகள் காரணமாக பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படல்
    - •உற்பத்திச் செலவு அதிகரித்தல்
    - •விலங்குகளுக்கும், மனிதருக்கும் பாதிப்பை ஏற்படுத்தல்
    - •அறுவடை சிரமம்

www.ikdu.lk

டிசம்பர் - 2010 (பகுதி – 2)

01. பாடசாலை விவசாயப் பண்ணையை அமைப்பதற்கு உத்தேசித்த விவசாய ஆசிரியர் ஒருவர் அதற்காக நிலத்தைப் பண்படுத்தல், பயிர்களைத் தெரிந்தெடுத்தல், மண்ணைக்காக்க வேண்டிய விதம் என்பன பற்றி மாணவர்களுக்கு அறிவுறுத்தினார். பாடசாலை வளவில் மண் களிமண்ணுள்ள வளமற்ற மண் ஆகையால் மண்ணை வளமுள்ளதாக்க வேண்டும் எனவும் மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

1. இவ்விவசாயப் பண்ணையில் அடிப்படை நிலம் பண்படுத்தலுக்குப் பயன்படுத்தத்தக்க **நான்கு** உபகரணங்களைக் குறிப்பிடுக

   - மண்வெட்டி — முள்மண்வெட்டி
   - மிதிமுள் — ஜப்பான் இறகுக் கலப்பை
   - முட் கலப்பை — வட்டத் தகட்டுக் கலப்பை
   - அலவாங்கு — குப்பை வாரி
   - சுழல் கலப்பை — ஏர்க் கலப்பை
   - நாட்டுக் கலப்பை

2. இவ்விவசாயப் பண்ணையில் காய்கறிகளைப் பயிரிடுவதற்குத் தயார்செய்த **இரு** வகைப் பாத்திகளைக் குறிப்பிடுக

   - உயர் பாத்தி — தாழ் பாத்தி
   - வரம்பு சால் பாத்தி — தனிப் பயிர்ச்செய்கைக் குழி

3. வயலில் நடுவதற்கு வித்து மேடைகளை இட்டுப் பெறப்படும் நாற்றுக்கள் மாத்திரம் பயன்படுத்தப்படும் **இரு** வகைக் காய்கறிப் பயிர்களைக் குறிப்பிடுக

   - தக்காளி — கத்தரி — கறிமிளகாய்
   - கோவா — சலாது — நோகோல்
   - பீற்றூட் — லீக்ஸ்

4. காய்கறி வித்து மேடைகளை இடுவதற்குப் பயன்படுத்தப்படும் நாற்று மேடைக் கலவையைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் பொருள்கள் யாவை? கலக்கப்படவேண்டிய விகிதத்தையும் குறிப்பிடுக

   - மேல்மண் , சேதனப்பசளை (கூட்டெரு/மாட்டெரு)
   - 1 : 1 or 50 : 50

5. இவ்விவசாயப் பண்ணையில் பயிரிடுவதற்கு உகந்த சொலனேசியக் குடும்பத்தின் **இரு** வகைப் பயிர்களைக் குறிப்பிடுக

   - கத்தரி — மிளகாய் — உருளைக் கிழங்கு
   - தக்காளி — கறிமிளகாய் — புகையிலை

6. சொலனேசியக் குடும்பத்தின் பயிர்களை நிதமும் தாக்குகின்ற ஒரு பற்றீரியா நோயைக் குறிப்பிடுக

   - பற்றீரியா வாடல்

7. இப்பயிரிடும் நிலத்திற்குக் கிடைக்கும் நீரின் அளவு வரையறைக்குட்பட்டது. ஆகவே பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்துவதற்கு உகந்த வினைத்திறனுள்ள **இரு** நீர்ப்பாசன முறைகளைத் தெரிவிக்க

   - தூவல் முறை

www.ikeou.lk

- துளிமுறை நீர்ப் பாசனம்
- முட்டி முறை நீர்ப் பாசனம்
- பொசிவு முறை
- கசிவு முறை

8. மேற்குறித்த விவசாயப் பண்ணையில் இருக்கும் நிலக்கீழ்த் தண்டுகள் உள்ள களைகளைக் கட்டுபடுத்துவதற்குப் பின்பற்றத்தக்க ஒரு பொறிமுறையையும் ஓர் இரசாயன முறையையும் குறிப்பிடுக
   - பொறிமுறை– மண்ணைப்புரட்டுதல். தண்டுக் கிழங்குகளை கையால் பிடுங்குதல்
   - இரசாயன முறை –களைநாசினி பாவித்தல்(ரவுன்டப்/வீடோல்/கிளைபோஸ்ட்)

9. மண்ணை வளப்படுத்துவதற்காக இப்பயிரிடும் நிலத்திற்கு ஒரு பூரண வளமாக்கிக் கலவை பிரயோகிக்கப்பட்டது. இவ்வளமாக்கிக் கலவையில் அடங்கும் **மூன்று** பிரதான போசணைச் சத்துக்களைக் குறிப்பிடுக
   - N– நைதரசன் P– பொசுபரசு K– பொட்டாசியம்

10. இவ்விவசாயப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளைத் தரத்துடன் சந்தைக்கு வழங்குவதற்குப் பின்பற்ற வேண்டிய **இரு** நடைமுறைகளைக் குறிப்பிடுக
    - முதிர்ச்சியடைந்த பின் (உரியளவில்) அறுவடை செய்தல்
    - நாளின் உரிய நேரத்தில் அறுவடை செய்தல்
    - உரிய உபகரணத்தைப் பயன்படுத்தி அறுவடை செய்தல்
    - அறுவடை செய்த விளைபொருட்களை தரம் பிரித்தலும் /சுத்தம் செய்தலும்
    - பொதி முறைப் பாதிப்பு ஏற்படாத வகையில் பொதி செய்தல்
    - சரியான முறையில் கொண்டு செல்லுதல்
    - உரிய முறையில் களஞ்சியப்படுத்தல்

www.ikedu.lk

டிசம்பர் - 2009 (பகுதி – 2)

01. நீண்டகாலமாக மண்ணரிப்புக்குள்ளான சாய்வான நிலமொன்றில் மீண்டும் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முற்பட்ட மாணவர்கள் சிலரின் அனுபவங்கள் வருமாறு

- ❖ இந்நிலத்திலிருந்து சிறிதளவு மண்ணை உள்ளங்கையில் எடுத்து ஈரமாக்கி கைகளால் உருட்டியபோது உடையாத நீளமான உருளையை உருவாக்கக் கூடியதாக இருந்ததுடன் அதனை உடையாத மோதிர வடிவில் ஆக்கக் கூடியதாகவும் இருந்தது.
- ❖ இத்தரையின் கீழான பகுதியில் நீர்வடிப்பு குறைவாக இருந்ததுடன் போதிய நீர்வடிப்பைக் கொண்ட மேற்பகுதித் தரையில் குக்கர்பீற்றேசியே, சொலனேசியே குடும்ப பயிர்களும் இராசவள்ளிக்கிழங்கு, வாழை போன்றவையும் செய்கை பண்ணப்பட்டிருந்ததுடன் இராசவள்ளிக்கிழங்குப் பாத்திகள் இலைச்சருகுகளினால் மூடப்பட்டிருந்தன.
- ❖ அனேகமான மரக்கறிப் பயிர்களில் வளர்ச்சியின்போது முதிர்ந்த இலைகளில் மஞ்சள் நிற மாற்றம் ஏற்பட்டதுடன் வளர்ச்சியும் குன்றிக் காணப்பட்டன.
- ❖ குக்கர்பீற்றேசியேக் குடும்பப் பயிர்களின் சில காய்களில் இடைக்கிடையே பிசின்போன்ற பதார்த்தம் வடிந்து காணப்பட்டதுடன் சில காய்கள் அழுகியும் காணப்பட்டன. மேலும் அக்காய்களின் உட்பகுதியில் கால்களற்ற குடம்பிகளும் காணப்பட்டன.
- ❖ பப்பாசி மரங்களிலுள்ள இலைகள் சுருங்கி மஞ்சள் நிறமாகி நரம்புகள் புடைத்துக் காணப்பட்டன

1. இந்நிலத்தில் மேற்கொள்ளக்கூடிய பொறிமுறை மட்காப்பு முறைகள் இரண்டையும் விவசாய முறைகள் **இரண்டையும்** குறிப்பிடுக

- **பொறிமுறை மட்காப்பு முறைகள்**
  சமவுயரக்கோட்டு வடிகால் அமைத்தல்
  சமவுயரக்கோட்டு கல்வேலி அமைத்தல்
  படிக்கட்டுக்கள் அமைத்தல்
  சமவுயரக்கோட்டு வரம்புகள் அமைத்தல்

- **விவசாய முறைகள்**
  சமவுயரக் கோட்டுப் பயிர்ச்செய்கை
  நிரற் பயிர்ச்செய்கை
  சுழற்சி முறைப் பயிர்ச்செய்கை
  மூடுபயிர்ச் செய்கை
  மூடுபடையிடல்
  உயிர்வேலி (SALT) அமைத்தல்
  சரியான நிலப்பயன்பாடு
  சேதனப் பசளையிடல்
  உரிய இடைவெளியில் பயிர்கள் நடல்
  புற்பாகங்கள் பதித்தல்

2. இந்நிலத்திலுள்ள மண்ணின் இழையமைப்பு எவ்வாறானதாக இருக்கக்கூடும்? இம் முடிவுக்கு வந்தமைக்கான காரணம் யாது?

- மென்மையான இழையமைப்பு
- **காரணம்** - ஈரமாக்கப்பட்ட மண்ணில் உடையாத உருளைகள், மோதிரங்களை அமைக்க கூடியதாகவிருத்தல்
  அதிகளவில் களியைக் கொண்டிருத்தல்

3. சாய்வான இந்நிலத்தின் மேற்பகுதியில் பயன்படுத்தப் பொருத்தமான ஆரம்பப் பண்படுத்தல் உபகரணங்கள் **இரண்டையும்** இடைப்பண்படுத்தல் உபகரணங்கள் **இரண்டையும்** குறிப்பிடுக

- **ஆரம்ப நிலம் பண்படுத்தல் உபகரணங்கள்**

  மண்வெட்டி முள்மண்வெட்டி வட்டத்தகட்டுக் கலப்பை
  மிதி முள் இறகுக்கலப்பை சுழல் கலப்பை
  குப்பை வாரி முட்கலப்பை நாட்டுக் கலப்பை/ஏர் பிக்காஸ்

- **இடைப்பண்படுத்தல் உபகரணங்கள்**

  மண்வெட்டி கைமுள்ளு கை சவள்
  ஹோ உபகரணம் முள் மண்வெட்டி களைகட்டும் கருவி(Weeder)
  சுழல் கலப்பை

4. அநேக மரக்கறிப் பயிர்களின் இலைகள் மஞ்சள் நிறமாக மாறியதற்கான காரணத்தை விளக்குக. இந்நிலைமையைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை யாது?

- **காரணம்** - நைதரசன் குறைபாடு
- **நிவர்த்தி செய்தல்** - நைதரசன் பசளையிடல்(யூரியா,அமோனியம் சல்பேற்று)

5. சொலனேசியேக் குடும்ப வித்துக்களின் முளைதிறனைச் சோதிப்பதற்கு உகந்த முறையொன்றைச் சுருக்கமாக விளக்குக

- பெத்திரிக் கிண்ணமுறை
- றக்டோல் முறை
- மணற்பெட்டி / நாற்றுப் பெட்டிமுறை
- சேம்பு இலைக்காம்பில் செய்யும் பரிசோதனை

❖ **பெத்திரிக் கிண்ணமுறை**

- எழுமாற்றாக 100 வித்துக்களை எடுத்தல்
- சுத்தமான பெத்திரிக் கிண்ணத்தின் அடிப்பகுதியில் ஈரலிப்பான பஞ்சு அல்லது வடிதாளை இடல்
- அதன் மீது வித்துக்களை வரிசையில் வைத்தல்
- மூடியால் மூடி 3 – 5 நாட்கள் விடல்
- முளைத்த வித்துக்களை எண்ணி முளைதிறன் சதவீதத்தை துணிதல்

❖ **றக்டோல் முறை**

- எழுமாற்றாக 100 வித்துக்களை எடுத்தல்
- சுத்தமான பருத்திப் புடவைத் துண்டை தெரிவு செய்தல்
- புடவையை ஈரமாக்கி அதன்மீது வித்துக்களை வரிசையில் இடல்
- அதன் ஒரு அந்தத்தில் மரக்கோலொன்றை வைத்து புடவையை அதன்மீது சுற்றி அதன் இரு முனைகளையும் நூலால் கட்டிவிடல்
- நீர் கொண்ட பாத்திரத்தில் அதனை சாய்வாக வைத்தல்
- 3 – 5 நாட்களில் முளைகட்டிய வித்துக்களை எண்ணி முளைதிறன் சதவீதத்தை துணிதல்

❖ **மணற்பெட்டி முறை**

- எழுமாற்றாக 100 வித்துக்களை எடுத்தல்

www.kedu.lk

- பொருத்தமான பாத்திரமொன்றைதெரிவுசெய்து அதன் அடிப்பகுதியில் நீர் செல்லும் துளைகளை இடல்
- தொற்றுநீக்கப்பட்ட மணலை இடல்
- வித்துக்களை நடல்
- மூடுபடை இட்டு நீரூற்றல்
- 3 – 5 நாட்களில் முளைகட்டிய வித்துக்களை எண்ணி முளைதிறன் சதவீதத்தை துணிதல்

6. a) வாழை வேர் நீள்மூஞ்சி வண்டுகளின் தாக்கம் இல்லாத பயிர்ச்செய்கையைப் பேணுவதற்காக நடுகைப் பொருட்களாகப் பயன்படுத்தவுள்ள வாழை உறிஞ்சிகளுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முற்பரிகரிப்பு முறையைக் குறிப்பிடுக
   - வாழை உறிஞ்சியின் வேர்களை அகற்றி அடிப்பகுதியில் நீரில் 24 – 48 மணிநேரம் இட்டு வைத்தல்
   - தொகுதிப் பூச்சிநாசினிக் கரைசலில் உறிஞ்சியின் அடிப்பகுதியை 05 நிமிட நேரம் அமிழ்த்தி வைத்தல் (பியூரடான் , குரேட்டர்)
   - நடமுன் குரேட்டர் இடல்

   b) இவ் வாழைச் செய்கைக்குப் பொருத்தமான நீர்ப்பாசன முறை யாது?
   - துளிமுறை (கசிவு) நீர்ப்பாசனம்
   - குட நீர்ப்பாசனம்

7. குக்கர்பீற்றேசியேக் குடும்பப் பயிர்களின் காய்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திய பூசிசிப் பீடை யாது? இதன் பாதிப்பைத் தவிர்க்க மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை **ஒன்று** தருக
   - **பூசிசிப் பீடை**– பழ ஈ
   - **பாதிப்பை தவிர்த்தல்**
     காய்களைச் சுற்றிக் கட்டுதல்
     பெரமோன் கண்ணி பயன்படுத்தல்
     பாதிக்கப்பட்ட காய்களை அழித்தல்
     சிபாரிசு செய்யப்பட்ட பூச்சி நாசினியைப் பயன்படுத்தல்

8. இராசவள்ளிக்கிழங்குப் பாத்திகளில் மூடுபடை இடப்பட்டிருப்பதன் பயன்கள் **இரண்டைக்** குறிப்பிடுக
   - மண் ஈரலிப்பைப் பேணுதல்
   - மட்காப்பு
   - களைக்கட்டுப்பாடு
   - மண்ணுக்கு பசளை கிடைக்கப்பெறல்

9. பப்பாசித் தாவரங்களுக்கு ஏற்பட்டுள்ள நோயையும், அதற்கான நோய்க் காரணியையும் குறிப்பிடுக
   - **நோய்** - பப்பாசி இலைச்சித்திர வடிவ நோய்
   - **நோய்க் காரணி**– வைரசு

10. a)இந்நிலத்தில் எல்லையோர வேலியில் நாட்டி இலைகளைப் பசுந்தாட் பசளையாகப் பயன்படுத்தக்கூடிய தாவரம் **ஒன்றைப்** பெயரிடுக

www.ikedu.lk

- கிளிசிரீடியா காவிளாய் முள்முருங்கை
- அகத்தி இப்பில் இப்பில் கிலுகிலுப்பை
- பூவரசு பாவட்டை/ஆடாதோடை

b)பசுந்தாட் பசளையாக மண்ணுக்குச் சேர்ப்பதால் கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டு** தருக

- மண் ஈரலிப்பு பேணப்படும்
- தாவரப் போசணைகள் கிடைக்கப் பெறல்
- மட்காப்பு
- மண் அங்கிகளுக்கு சாதகமாக அமைதல்
- மண் பௌதீக இயல்பு விருத்தியாக்கப்படல்

www.lkedu.lk

டிசம்பர் - 2008 (பகுதி – 2)

01. பொருட்காட்சிக்கென பண்ணையொன்றை அமைப்பதற்காக பாடசாலை வளவில் ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் அதிகளவு களைகள் வளர்ந்திருப்பதைக் கண்ட அதிபர் "பொருட்காட்சிக்கு இன்னும் மூன்று மாதங்களே உள்ளன ஆரம்ப நிலம்பண்படுத்தலுக்கு நான்கு சில்லு உழவு இயந்திரத்தைப் பயன்படுத்துங்கள். ஏனைய நடவடிக்கைகளை வகுப்பு மாணவர்களிடம் ஒப்படையுங்கள்" என அறிவுறுத்தினார். இதற்கமைய பின்வருமாறு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன.

தரம் 11 – துணைப் பண்படுத்தல்

தரம் 10 – பொருட்காட்சிக்கெனப் பல்வேறு நாற்றுமேடை முறைகளை காட்சிப்படுத்தல்

தரம் 9 – பண்ணையில் நாட்டுவதற்கு நாற்றுக்களைப் பெறுவதற்கான நாற்று மேடைகளை அமைத்தல்

1. ஆரம்பப் பண்படுத்தலின் போது உழவு இயந்திரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் பிரதான செயற்பாடுகள் **இரண்டு** தருக
    - மண்ணைத் தூர்வையாக்குதல்
    - மண்ணைப் புரட்டுதல்
    - களைக்கட்டுப்பாடு
    - மட்டப்படுத்தல்

2. இதற்கென உழவு இயந்திரத்தில் இணைத்துப் பயன்படுத்தக்கூடிய கலப்பை வகைகள் **இரண்டு** தருக
    - இறகுக் கலப்பை (அச்சுத் தகட்டுக் கலப்பை)
    - வட்டத்தட்டுக் கலப்பை
    - முட்கலப்பை

3. தரம் 11 மாணவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட துணைப்பண்படுத்தல் செயன்முறையின் போது மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் **இரண்டு** தருக
    - கட்டிகளை தூர்வையாக்குதல்
    - வேர்கள், கற்களை அகற்றுதல்
    - மண்ணை மட்டப்படுத்துதல்
    - பாத்தியமைத்தல்

4. தரம் 10 மாணவர்களால் தயார் செய்யக்கூடிய நாற்றுமேடை வகைகள் **நான்கைப்** பெயரிடுக
    - தாழ் நாற்றுமேடை
    - உயர் நாற்றுமேடை
    - சாடி நாற்றுமேடை
    - நெரிடோக்கா நாற்றுமேடை
    - டபொக் நாற்றுமேடை
    - மணல் நாற்றுமேடை
    - சேற்று நாற்றுமேடை
    - துணை நாற்றுமேடை

5. ஆரோக்கியமான நாற்றுக்களைப் பெறுவதற்காக நாற்றுமேடை ஊடகத்தை தொற்றுநீக்ககூடிய முறைகள் **இரண்டு** தருக
    - சூரிய ஒளி படச்செய்தல்
    - எரித்தல்
    - நீராவிப் பிரயோகம்
    - தூபமாக்கல்
    - பொலித்தீனால் மூடுதல்
    - கொதிநீர் ஊற்றுதல்

www.ikedu.lk

- இரசாயனமுறை பொலித்தீனால் மூடல்

6. பொருட்காட்சிக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்ட அலங்கார வில்வடிவ (arch) வளைவில் படரவிடத்தக்க குக்கர்பீற்றேசியே குடும்பத் தாவரங்கள் **இரண்டைப்** பெயரிடுக
    - பீர்க்கு, பாகல்,புடோல், சுரக்காய், கெக்கரி

7. தரம் 8 மாணவர்களால் இடைப்பண்படுத்தலின் போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் **இரண்டு** எழுதுக
    - மண்ணைத் தூர்வையாக்குதல் மண்ணை அணைத்தல்
    - பசளையை மண்ணுடன் கலத்தல் கொத்துதல்
    - வாய்காலில் உள்ள மண்ணை அகற்றல் களைக்கட்டுப்பாடு


8. பாத்திகளில் வளர்ந்திருக்கும் களைகள் சில நிலக்கீழ்ப் பாகங்களைக் கொண்டுள்ளன எனவும் அவற்றைக் கட்டுப்படுத்துவது கடினமெனவும் மாணவர்களால் அவதானிக்கப்பட்டது இவ்வாறான களைகளுக்கு உதாரணங்கள் **இரண்டு** தருக
    - கோரை, அறுகு, இலுக், இஞ்சிப்புல்

9. பயிர்ச்செய் நிலத்தை அலங்கரிப்பதற்காகவும் பயிர்ச்செய்கைக்குச் சேதத்தை ஏற்படுத்தும் பூச்சிகளை விரட்டவும் பயன்படுத்தக்கூடிய தாவரங்கள் **இரண்டைப்** பெயரிடுக
    - செவ்வந்தி, காட்டுச் சூரியகாந்தி/சூரியகாந்தி, காட்டு கிலுகிலுப்பை

10. பாடசாலையில் தயாரிக்கக்கூடிய இரசாயனமல்லாத பீடை நாசினி வகைகள் **இரண்டு** தருக
    - வேப்பம் வித்துச் சாறு
    - புகையிலை நரம்பு அவிக்கப்பட்ட நீர்
    - கிளிசிரீடியா இலைகள் துவைத்து பிழிந்த சாறு
    - உள்ளிச் (வெள்ளைப்பூடு) சாறு
    - பப்பாசிக் காய்ச்சாறு

www.ikeu.lk

டிசம்பர் - 2007 (பகுதி – 2)



01. 1. மாணவரொருவர் அளவுச்சாடியில் 1/3 பங்கிற்கு மண்மாதிரியையும் 2/3 பங்கிற்கு நீரையும் நிரப்பி மரக்ககோலினால் நன்கு கலக்கி ஓய்வில் வைத்தார். 24 மணி நேரத்தின் பின் அவதானித்தபோது உருவில் காட்டப்பட்டதைப்போல் மண் துணிக்கைகள் படிந்து காணப்பட்டது.

a) மேலே A, B, C, D, E, F ஆகியவற்றினால் முறையே குறிக்கப்படுவனவற்றைப் பெயரிடுக

- A – பரல்கள் /சிறு கற்கள் / கற்துண்டுகள்
- B - பெருமணல்
- C – மென்மணல் / சிறுமணல்
- D – அடையல் / மண்டி
- E – களி
- F – தொங்கல் / உக்கல் / சேதனப்பொருட்கள்

b) அளவுச்சாடியில் மண்ணை இட்டு நீர்விட்டுக் கலக்கி 15 நிமிடங்களின் பின்னரும் நீர் கலங்கிய நிலையில் காணப்பட்டது இதற்கான காரணத்தைக் குறிப்பிடுக

- நீரில் களி தொங்கல் நிலையில் காணப்படல்

c) அளவுச்சாடியை 24 மணி நேரத்தின் பின் அவதானித்தபோது நீர் தெளிவாகக் காணப்பட்டது. இதற்கான காரணம் யாது?

- நீரில் தொங்கல் நிலையில் காணப்பட்ட களி படிவடைதல்

2. நாற்றுச்சாடிகளைப் பயன்படுத்தி வீட்டுத் தோட்டங்களுக்குத் தேவையான நாற்றுக்களை உற்பத்தி செய்வது மிகச் சிறந்ததாகும்

a) இதற்காகப் பயன்படுத்தப்படும் நாற்றுச்சாடி வகைகள் **நான்கைத்** தருக

- மட்பாத்திரம் பொலித்தீன் சாடி
- மூங்கிற் கொட்டு தும்பினால் ஆக்கப்பட்ட சாடி
- பிளாத்திக்குச் சாடி கடதாசியினால் ஆக்கப்பட்ட சாடி
- தகரப் பேணிகள் இலைகுழைகளால் ஆக்கப்பட்ட சாடி

b) அந்நாற்றுச் சாடிகளை நிரப்பத் தேவையான நாற்றுமேடை ஊடகத்தை தயாரிப்பதற்குரிய மூலப்பொருட்கள் யாவை?

- அரித்தெடுக்கப்பட்ட மேல்மண், மாட்டெரு, கூட்டெரு, மணல், தும்புத்தூள்

c) நாற்றுமேடைகளில் அதிகளவு பாதிப்பை ஏற்படுத்தும் **பூச்சிகளல்லாத** பீடை **ஒன்றைப்** பெயரிடுக

- நத்தைகள், ஓடில்லா நத்தைகள்

3. a) அதிக மணலைக் கொண்ட மண்ணில் பயிர்ச்செய்கை மெற்கொள்ளும்போது ஏற்படக்கூடிய பிரச்சினைகள் **இரண்டு** தருக

www.ieou.lk

- விரைவாக வெப்பமடைதல்
- குறைந்தளவு கற்றயன் மாற்றீட்டுக் கொள்ளளவு
- குறைந்தளவு நீர்பற்றுந் திறன்
- நலிவான மண் கட்டமைப்பு
- இடப்படும் பசளைகள் இலகுவில் கழுவி எடுத்துச் செல்லப்படல்
- நிலையான பாத்திகளை அமைப்பது கடினம்
- மண் வளமற்றதாக இருத்தல்

b) இவ்வாறான மண்ணைப் பயிர்ச்செய்கைக்கு உகந்ததாக மாற்றியமைக்க மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கையைக் குறிப்பிடுக

- களிமண் சேர்த்தல்
- சேதனப் பதார்த்தங்கள் சேர்த்தல்

c)கிழங்குப் பயிர்ச்செய்கையில் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் பாத்திவகை யாது? இப்பாத்தி வகை பயன்படுத்தவதன் காரணங்கள் யாவை?

- வரம்புசால் முறை
- **காரணம்** - நீர்வடிப்பு விருத்தி செய்தல், மண்ணைத் தூர்வையாக்கல்

4. a) முட்டையுற்பத்திக்கு மிகவும் உகந்த கோழி வர்க்கங்கள் **இரண்டு** தருக

- லெக்கோன் வர்க்கங்கள்,மைனோக்கா வர்க்கங்கள், அங்கோனா வர்க்கங்கள்

b) மாடுகளுக்கு உணவாகப் பயன்படுத்தக்கூடிய அவரையத் தாவர வகைகள் **இரண்டு** எழுதுக

- இப்பில் இப்பில் கிளிசிரீடியா/சீமைக்கிளுவை/லாடாப்
- முள்முருங்கை சென்ரோசிமா பியூப்பசன்ஸ்
- பியூரேரியா ஸ்ரைலோசாந்தஸ்

c) கால்நடை வைத்திய நிலையங்களால் ஆற்றப்படும் சேவைகள் **இரண்டு** தருக

- நோய்த்தடுப்பு வேலைத்திட்டத்தை அமுல் செய்தல்
- செயற்கைமுறைச் சினைப்படுத்தலை மேற்கொள்ளல்
- நல்லினக் கால்நடைகளை வழங்குதல்
- கால்நடை நோய்களுக்கான சிகிச்சை வழங்குதல்
- இலவச வைத்திய சேவை

www.ikdu.lk